சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. Hmop.20/2017**

2024ம் ஆண்டு ஜுன் மாதம் 24ம் நாள் திங்கட்கிழமை

மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **ம.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.ராதா, எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபிநாத் | தொழில் | |
| தந்தை பெயர் | ஏழுமலை | ஜாதி | |
| கிராமம் | கணணமங்கலம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**24.06.2024 முதல் விசாரணை**

நான் மேற்கண்ட வழக்கில் மனுதாரர் ஆவேன். எதிர்மனுதாரர் என் மனைவி. என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். என் தரப்பு சான்றாவணங்களாக, 13.06.2013 தேதியிட்ட அசல் திருமண அழைப்பிதழ் **ம.சா.ஆ.1,** 14.10.2016 தேதியிட்ட வழக்கறிஞர்அறிவிப்பு **ம.சா.ஆ2,** அஞ்சலக ஒப்புகை அட்டை **ம.சா.ஆ.3**, தாக்கல் செய்கிறேன். மனுவில் கோரியுள்ளவாறு உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.